[1978 மார்ச் 15

2. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Self Employment Scheme

* 170. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether Young entrepreneurs under the "Self-Employment Scheme", Ambattur, were allowed to start their workshops using electricity, at 8.00 p.m.;

(*b*) whether this time was subsequently changed to 9.00 p.m. without notice; and

(*c*) whether several entrepreneurs who started work at 8.00 p.m. for want of notice, had their electric connection cut and penalty was also levied for restoration of connection?

சுய வேலை வாய்ப்புத் திட்டம்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அம்பத்தூரில் "சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்" கீழ் புதிதாக தொழிலில் முனையும் இளைஞர்கள், இரவு 8-00 மணிக்கு மின்சாரத்தைப் பயன் படுத்தி அவர்களது தொழில் பட்டறைகளைத் தொடங்க அனுமதிக்கப் பட்டனரா?

(இ) இந்த நேரம் எவ்வித அறிவிப்புமின்றி இரவு 9-00 மணி என்று பின்னர் மாற்றப்பட்டதா?

(உ) அறிவிப்பு கொடுக்கப்படாததால் இரவு 8-00 மணிக்கு பட்டறை களைத் தொடங்கிய பல தொழில் முனைவோர்களுக்கு, மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, மீண்டும் மின் தொடர்பு அளிப்பதற்காக தண்டக் கட்டணமும் விதிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வரும் அம்பத்தூர் சிறுதொழிலதிபர்களின் தொழிற்சாலைகள் உட்பட அனைத்து நகர்ப்புற குறைவழுத்தத் தொழிற்சாலைகளுக்கும், தொடர்ச்சியாக இயங்காத உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கும் காலையிலும், மாலையிலும் 6 மணி முதல் 9 மணி வரை இருந்த மின்சாரக் கட்டுப்பாட்டை ஒரு பரிசோதனை அடிப்படையில் 20—8—1977 முதல் 19—9—1977 வரையில் ஒரு மாதத்திற்கு மட்டும் தளர்த்திக் காலையிலும் இரவிலும் கூடுதலாக ஒரு மணிநேரம் மின்சாரம் வழங்கப்பட்டது. பூரணமாக இது ஒரு பரிசோதனை அடிப்படையில் தான் என்ற இந்த உண்மைக்குப் பரவலான விளம்பரமும்

1978 மார்ச் 15]

கொடுக்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள தமிழ்நாடு சிறுதொழில் கழகத் தலைவர் அவர்களுக்கு கடித மூலமாகத் தெரிவிக்கப்பட்டது. தொழில் நுட்ப ரீதியாக மேற்கொண்டு தொடர்ச்சியாக அளிக்க இயலாமல் போன தாலும் மின் வாரியத்தின் செயல்முறைகளுக்குப் பிரச்சினைகள் ஏற்பட்ட தாலும் கூடுதலாக ஒரு மணி நேரத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்ட இச் சலுகை திரும்பப் பெறப்பட்டது. ஆகவே. தாக்கீது வழங்கி இச்செய்கை திரும்பப்பெற்றிருக்கவேண்டும் என்ற கேள்வி எழவில்லை.

(உ) ஆம். 19—9—1977-க்குப் பிறகு உச்சகால வரம்பாணைகளை மீறியவர்களுக்குத் தண்டத் தீர்வை விதிக்கப்பட்டது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, இந்தத் திட்டம் 'எக்ஸ்பரிமெண்ட்டலாகத்' தான் செய்யப்பட்டது என்று சொன்னார்கள் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் புதிதாகத் தொழில் ஆரம்பித்த அந்த இளைஞர்கள் அரசாங்கம் தங்களுக்கு ஏற்கனவே அனுமதித்த நேரத்தை மாற்றி யிருந்தாலும்—விவரம் தெரியாத ஒரு சிலர் அங்கே மின்சாரத்தைப் பயன்படுத்தியதற்காக மின்சார இணைப்பு துண்டிக்கப் பட்டது. அது மட்டுமல்லாமல், அதற்கான தண்டக் கட்டணமும் அவர்களிட மிருந்து வாங்கப்பட்டுள்ளது. அது முறைதானா? எனவே அப்படி வாங்கப் பட்ட தண்டக் கட்டணத்தைத் தள்ளிக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொழிற்சாலையை அவர்கள் துவக்கினார்கள் என்பதால், தனிச்சலுகை ஏதும் காட்டப்படவில்லை. "Peak Hour Restrictions" இருக்கிறது; அதைத் தளர்த்திப் பார்க்கலாம் என்ற நோக்கத்துடன் ஒரு மணி நேரத்தை அதில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று பத்திரிகைகளில்கூட அறிவிக்கப் பட்டது. இந்தத் திட்டம் ஒரு மாத காலத்திற்குத்தான் அமுலில் இருந்தது. ஆனால் இதன் காரணமாக பல பிரச்சினைகள் ஏற்பட்ட காரணத்தால், அது சோதனைக் காலத்தோடு முடிவடைந்துவிட்டது. எனவே இது தெரிந்தவுடனே அவர்கள் "Peak Hour" நேரத்தைப் பயன்படுத்தாமல் இருந்திருக்க வேண்டும். பயன்படுத்தியிருப்பார்களானால், "Peak Hour" நேரத்தில் மின்சாரத்தைப் பயன்படுத்தியதற்காக என்னென்ன தண்டனைகள் இருக்கின்றனவோ அவைகளை அனுபவித்துத்தான் தீர வேண்டும்.

திரு. எம். சங்கரலிங்கம் : "Peak Hour" நேரத்தில் மின்சாரத்தைப் பயன்படுத்திய 'சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்' கீழ் வரும் புதிய தொழிலாளர்கள், தொழில் அதிபர்கள் எத்தனை பேர்கள்? அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டக் கட்டணத்தை விலக்கிக்கொள்ள வேண்டுமென்று மனுக்கள் வந்திருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்த விவரம் தற்போது என்னிடம் இல்லை.

THIRU G. SWAMINATHAN : Sir, there is only one kind of electricity tariff both for power used during peak hour and for power consumed during ordinary period. Will the Government consider the introduction of two kinds of tariff separately for peak hour and ordinary period and the fixation of higher tariff for peak hour so that people may not go in for peak hour consumption?

THE HON. THIRU S. RAMACHANDRAN : This is another form of preventing the consumers from utilising the energy during peak hour. Now the rules in force provide for disconnection of such services where they are found using energy during peak hours, apart from the levy that is imposed on such people.

Private Tanks.

* 171 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the farmers of Kanyakumari district requesting the Government to take over all private tanks receiving water from Government reservoirs; and

(*b*) if so, the action taken thereon?

தனியார் குளங்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசாங்க நீர்த் தேக்கங்களிலிருந்து நீர் பெறுகிற தனியார் குளங்களை எல்லாம் அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று, கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளிடமிருந்து முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இது பரிசீலனையில் உள்ளது.